# தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை வாகனங்கள் டெண்டர் விளம்பரம்

தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறையின் கீழ் செயல்படும் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு, எண்.735, அண்ணா சாலை, சென்னை – 02, என்ற விலாசத்தில் செயல்படும் அலுவலகத்திற்கு சொந்தமான கழிவு நீக்கம் செய்யப்பட்ட மகேந்திர பொலிரோ வாகனம் (TN 01 G 4045) மற்றும் மூன்று அம்பாஸ்டர் வாகனங்கள் (TN 01 G 4036, TN 01 G 3776, TN 02 AG 7575) உள்ளது உள்ளபடி ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. வாகனங்களுக்கான ஏல விற்பனை படிவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

2. இப்படிவங்கள் நான்கு வாகனங்களுக்கும் தனி தனியே பூர்த்தி செய்ய வேண்டும். ஒரு படிவத்திற்கு ரூ.105/– வீதமும் மற்றும் ஒரு வாகனத்திற்கு ரூ.2,000/–(ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) வீதம் நான்கு வாகனங்களுக்கு ஏல காப்புத் தொகையும் கணக்கீடு செய்து **District Library Officer, Chennai"** என்ற பெயரில் வங்கி வரைவோலை (Demand Draft) இணைக்கப்படவேண்டும்.

3. ஏல விற்பனை படிவங்கள் மூடி முத்திரையிடப்பட்டு மேற்கண்ட முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலம் 12.07.2022 அன்று கிடைக்கப் பெற வேண்டும். 14.07.2022 அன்று மாலை 3.30 மணிக்கு வருகைப் புரிந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மாவட்ட நூலக அலுவலர் அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகளின் உறை திறக்கப்படும்.

4. ஏல விற்பனை படிவத்துடன் இணைக்கப்பட வேண்டிய படிவத்திற்கான கட்டணம் மற்றும் ஏல காப்புத் தொகைக்கான வங்கி வரைவோலை (Demand Draft) இணைக்கப்படவில்லையெனில் படிவம் ஏற்றுக் கொள்ளப்படாது என்பதையும் தெரிவிக்கப்படுகிறது.

5. மேற்கண்ட ஏல விற்பனை குறித்த விவரங்களுக்கு <u>044–28524791</u> என்ற அலுவலக தொலைப்பேசி எண்ணில் சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்கள் தவிர்த்து தொடர்பு கொண்டு தெரிந்துக் கொள்ளவும்.